முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜப்பான் சென்றடைந்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

இதுவரை ஜப்பான் சென்றுள்ள அரசுக் குழுக்கள் டோக்கியோ மட்டுமே சென்று வந்துள்ளனர். ஒசாகாவில் இந்திய வம்சா வளியினர் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இங்கு பல முன்னணித் தொழில் நிறுவனங்களும் அமைந்துள்ளன. எனவே, ஒசாகா நகருக்கும் வருகை தரும்படி விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று முதல்முறையாக ஒசாகா நகருக்கு தமிழ் நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இந்தக் குழு சென்றது.

ஒசாகாவில், ஜப்பான் வெளியுறவு வர்த்தக நிறுவனமான, ஜெட்ரோ (JETRO) நிறுவனத்துடன் இணைந்து அங்கு நடைபெற உள்ள முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள உள்ளார்.

மேலும் முக்கிய நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளைச் சந்தித்து தமிழ் நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வதற்கு அழைப்பு விடுக்க உள்ளார். அதனைத் தொடரந்து ஒசாகா வாழ் இந்திய சமூகத்தினர் அளிக்கும் வரவேற்பு நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ள உள்ளார்கள்.

டோக்கியோ நகரில் அந்நாட்டின் பொருளாதாரம் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் நிஷிமுரா யசுதோஷி மற்றும் ஜப்பான் தொழில் நிறுவனமான, ஜெட்ரோ தலைவர் இஷிகுரோ நொரிஹிகோ அவர்களை முதலமைச்சர் அவர்கள் சந்திக்க உள்ளார். மேலும், 200க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் கலந்துகொள்ளும் முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் கலந்துகொள்கிறார்.

கியோகுடோ மற்றும் ஓம்ரான் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளபட உள்ளன. மேலும் அங்குள்ள மேம்பட்ட தொழில் மையத்தைப் பார்வையிட உள்ளார்.

நேற்று (25.05.2023) சென்னையில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், அசோசெம் கூட்டமைப்பால் நடத்தப்பட்ட குழும மேம்பாடு கருத்தரங்கில் குழும வளர்ச்சி புத்தகத்தினை வெளியிட்டார். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் TIIC மேலாண்மை இயக்குநர் ஹன்ஸ் ராஜ் வர்மா, அசோசெம் தமிழ்நாடு கவுன்சிலின் மாநிலத் தலைவர், காவேரி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர். அரவிந்தன் செல்வராஜ், கிராண்ட் தோர்டன் பாரத் பங்குதாரர் பேராசிரியர். பத்மானந்த், தொழில் முனைவோர்கள், தொழில் அதிபர்கள், அசோசெம் தமிழ்நாடு மாநில கவுன்சில் நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டில் பள்ளிகளில்

தமிழ் கட்டாய பாடம்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

சென்னை, மே 26-

வரும் கல்வியாண்டு முதல் "தமிழ் கட்டாய பாடம்" என்பதை தனியார் பள்ளிகள் சரியாக பின்பற்றுகிறார் களா? தமிழாசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்களா? என்பதை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என அமைச்சர் அன்பில் மகேஷ் வலியுறுத்தியுள்ளார்.

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுடனான இணையவழி கூட்டத்தில் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பது, பள்ளித் தூய்மை, விலையில்லாப் பொருட்களை உடனே வழங்குவது குறித்து கண்காணிக்கவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

சாலை விதிகளை கடைப்பிடித்தல் - விபத்துகளைத் தவிர்த்தல் குறித்து விழிப்புணர்வு!

நெல்லையில் சாலை பாதுகாப்பு குறித்த ஆய்வுக் கூட்டம்!

மு.அப்பாவு - எ.வ.வேலு - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் - மனோ தங்கராஜ் பங்கேற்பு!

நெல்லை.மே 26 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சாலை பாதுகாப்பு குறித்த ஆய்வுக் கூட்டம் தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள், சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆகியோர் தலைமையில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் பிரதீப்யாதவ், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன்,சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல்வகாப் (பாளை) நயினார் நாகேந்திரன் (நெல்லை) ரூபி மனோகரன்(நாங்குநேரி) மாநகராட்சி ஆணையர் சிவகிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.மாவட்ட ஆட்சியர் மரு.கார்த்திகேயன் வரவேற்புரையாற்றினார்.

பின்னர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலங்களில் அனைத்து பகுதிகளிலும் சாலை பாதுகாப்பு குறித்து ஆய்வு கூட்டம் நடத்த சொல்லி அமைச்சர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.சாலை விதிகளை அனைவரும் கடைப்பிடித்து பாதுகாப்பு தன்மையை மேம்படுத்திட வேண்டும். பணகுடி,வள்ளியூர் பகுதி காவல் நிலையங்களில் விபத்துகளின் எண்ணிக்கையை ஆய்வு செய்தாலே அமைச்சருக்கு தெரியும்.

ரயில்வே கீழ்பாலம் தேவை!

எனவே விபத்துக்களை தவிர்க்க தெற்கு வள்ளியூர் விலக்கில் இருந்து மாவட்ட தலைமை மருத்துவமனை செல்லும் சாலை,பணகுடி புறவழிச்சாலையிலிருந்து இருபுறங்களிலும் மேம்பாலம் உள்ளிட்ட 3 இடங்களில் மேம்பாலம் அமைக்க வேண்டும்.காவல்கிணறு விலக்கில் ரயில்வே கீழ்பாலம் அமைத்து தர வேண்டும். நெல்லை தென்காசி சாலை பணிகளை விரைவுபடுத்த வேண்டும்.முலக்கரைப்பட்டி உள்ளிட்ட நான்கு இடங்களில் புறவழிச் சாலைகள் அமைத்து தர வேண்டும். தேசிய நெடுஞ்சாலை ஆணைய சாலைகளில் மக்கள் நிழற்குடை வசதியின்றி வெயில் காலத்திலும் மழைக்காலத்திலும் படும் துன்பத்தை பார்க்கிறோம் எனவே இந்த சாலைகளில் நிழற்குடை அமைக்க அமைச்சர் அனுமதி பெற்று தர வேண்டும்.

இவ்வாறு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசினார்.

அதன் பின்னர் பொதுப் பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

நெல்லுக்கு வேலி அமைத்த பெருமை திருநெல்வேலி என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழகத்திற்கு தாமிரபரணி ஆறு,படிப்பிற்கு பாளையங்கோட்டை, அணைக்கட்டுக்கு பாபநாசம், பாய்க்கு பத்தமடை என்ற பல அம்சங்களைக் கொண்ட மாவட்டம் நெல்லை மாவட்டமாகும். நெல்லை மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் 99 கிலோமீட்டர்,மாநில நெடுஞ்சாலைகள் 450 கிலோமீட்டர்,மாவட்ட முக்கிய சாலைகள் 204 கிலோ மீட்டர்,மாவட்ட இதர சாலைகள் 1022 கிலோமீட்டர் என மொத்தம் 1775 கிலோ மீட்டர் நீள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2021-22 ஆம் நிதியாண்டில் 165 கிலோ மீட்டர் நீளமுள்ள 102 சாலை பணிகள் ரூபாய் 124 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு 83 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.2022-23 ம் நிதியாண்டில் 77 கிலோ மீட்டர் நீளம் உள்ள 38 சாலை பணிகள் ரூபாய் 137 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றில் 10 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.2022-23 ஆம் ஆண்டில் 15 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் பணிக்கு 40 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நவம்பர் 2023க்குள் முடிக்கப்படும்!

2021-22 மற்றும் 2022-23 நிதியாண்டுகளில் ரூபாய் 7 கோடி மதிப்பில் 19 பாலப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றில் 15 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 4 பணிகள் நடைபெற்று வருகின்றன. 2021-22 மற்றும் 2022-23 ஆம் நிதியாண்டுகளில் 18 கோடி மதிப்பில் 5 பாலப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நபார்டு மற்றும் கிராம சாலைகள் அலகு மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பாளையங்கோட்டைசிவந்திப்பட்டி சாலையில் கடவு எண்6ல் பாளையங்கோட்டை மற்றும் செய்துங்கநல்லூர் ரயில்வே நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம் 27 கோடி மதிப்பில் திட்டங்கள் அலகு மூலம் 95 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.தற்போது ரயில்வே பணிகள் நடைபெற்று வருகின்றன.மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். ரயில்வே கடவு எண்74 பி (காவல்கிணறு) அருகில் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு 19 கோடிக்கு நிலம் எடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

புறவழிச்சாலைகளை பொறுத்தவரையில் திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலை 7லிருந்து (தாழையூத்து) தொடங்கி பொன்னாக்குடியில் முடியும் 33 கிலோ மீட்டர் நீளத்திற்கு மேற்கு புறவழிச் சாலை அமைப்பதற்கு ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் நில எடுப்பு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. அம்பாசமுத்திரம் நகருக்கு 6 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூபாய் 66 கோடி மதிப்பீட்டில் புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு நில எடுப்பு முடிந்து ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் - பாளையங்கோட்டை - அம்பாசமுத்திரம் சாலையில் கிலோ மீட்டர் 64 /200 முதல் 85/700 வரை அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் பணிக்கு 204 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தம் செயலாக்கப்பட்டு 43 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நவம்பர் 2023 முடிக்கப்படும்.

11 திருநெல்வேலி - செங்கோட்டை - கொல்லம் சாலையில் 22 கிலோ மீட்டர் நீளத்திற்கு 176 கோடி மதிப்பீட்டில் இருவழித்தடத்தில் இருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணியில் 93 சதவீத பணிகள் முடிவுற்றன.மீத பணிகள் அக்டோபர் 2023 முடிக்கப்படும்.

மாநிலம் முழுவதும் 5 லட்சம் மரக்கன்றுகள்!

சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு மாணவ-மாணவியர்கள் பயிலும் பள்ளிகளிலேயே வகுப்பு ஆசிரியர்கள் மூலமாக சாலை விதிமுறைகள் குறித்து கற்றுக் கொடுக்க வேண்டும். பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளுக்கு மாணவ பருவம் முதலே சாலை விதி முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்த வேண்டும்.பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வாகனம் ஓட்டுகின்ற வயதை எட்டிய பிறகு வாகனங்கள் வாங்கி தருவதால் சிறுவயதில் ஏற்படும் சாலை விபத்துக்களை தவிர்க்க முடியும்.

வாகன ஓட்டுனர்கள் சாலைகளில் பயணம் செய்யும்போது சீட் பெல்ட் கண்டிப்பாக அணிய வேண்டும். தலைக்கவசம் உயிர்க்கவசம் என்பதால் இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் தலைக்கவசம் கண்டிப்பாக அணிவதோடு,3 நபர்கள் பயணிப்பதை தவிர்க்க வேண்டும். வாகன ஓட்டுனர்கள் சிக்னல்களை முறையாக கடைப்பிடித்து வாகனங்களை இயக்க வேண்டும். சென்னை ஐஐடி, அண்ணா பல்கலைக்கழகம் பேராசிரியர்கள் மூலம் தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்கள் 355 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.அது போல சாலைகளின் தரத்தை ஆய்வு செய்து தணிக்கை செய்வதற்காக 53 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு ள்ளது.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் விபத்து குறைவாக உள்ள மாவட்டங்களுக்கு முதல் பரிசு ரூபாய் 25 லட்சம்,2வது பரிசு ரூ13 லட்சம்,3 வது பரிசு 10 லட்சம் என முதலமைச்சர் அவர்கள் ஆண்டுதோறும் வழங்குகிறார். நெல்லை மாவட்டம் விபத்தில்லா மாவட் டம் என பெயர் பெற்று பரிசு பெற வேண்டும்.கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநிலம் முழுவதும் 5 லட்சம் மரக்கன்றுகள் நெடுஞ்சாலை துறையால் நடப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

அதன் பின்னர் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரடியாக சென்று எந்தெந்த சாலைகள் பாதிப்படைந்துள்ளன. எங்கே விபத்துக்கள் நடைபெறுகின்றன. சாலைகள் எப்படி சீரமைப்பது உள்ளிட்டவைகள் குறித்து நேரடியாக ஆய்வு மேற் கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இன்னுயிர் காப்போம் திட்டம், நம்மை காக்கும் 48 திட்டம் என்ற உன்னத திட்டத்தினை தொடங்கி வைத்ததன் வாயிலாக சாலைகளில் ஏற்படும் விபத்தினால் உயிரிழப்பை தடுக்கும் வகையில் அவசர உயிர் காக்கும் உயர் சிகிச்சையான இலவச மருத்துவ உதவி வழங்கப்படுவதோடு, விபத்தில் பாதிக்கப்பட்டவரை காப்பாற்றுபவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் வெகுமதி அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் ராஜகண்ணப்பன் பேசினார்.

கூட்டத்தில் சாலை பாதுகாப்பு குறித்த கையேட்டை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் எ.வ.வேலு ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்,ஆகியோர் வெளியிட்டு சாலை பாதுகாப்பு தொடர்பாக நடந்த விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ - மாணவிகளுக்கு பரிசு,கேடயங்கள்,நெடுஞ்சாலைத்துறை ஓட்டுனர்களை பாராட்டி நற்சான்றிதழ், கேடயங்களையும் வழங்கினர்.

நிகழ்ச்சி நிறைவில் நெடுஞ்சாலை துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமை பொறியாளர் ஆர்.சந்திரசேகர் நன்றி உரையாற்றினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
இயந்திர பொறியியல் துறை

கீழ்காணும் பணியினை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (SWD/Mech) அவர்களால் குறுகிய கால மறு மின்னனு ஒப்பம் கோரப்படுகிறது

இ.பொ.து.ந.க.எண். எம்1/1924B/2022,
50 எண்ணிக்கையிலான இலகுரக காம்பாக்டர் வாகனங்களை இரண்டாண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ளும் பணி.

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : 08.06.2023 பிற்பகல் 3.00, மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 09.06.2023 பிற்பகல் 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு : http://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2741 / ஒப்பந்தப்புள்ளி / 2023 மேற்பார்வை பொறியாளர் (இ/ம.நீ.வ.,)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

சேப்பாக்கம் பகுதி தி.மு.க இளைஞரணி சார்பில் திராவிட மாடல் ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் பகுதி இளைஞரணி அமைப்பாளர் பி.பாலச்சந்தர் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் சென்னை மாநகராட்சியின் 9வது மண்டல குழு தலைவர் எஸ்.மதன்மோகன் தலைமையில் சிந்தாதிரிப்பேட்டையில் 23.05.2023 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில மருத்துவ அணியின் செயலாளரும், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினருமான எழிலன் நாதநாதன் சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப.பிரகாஷ், வட்ட செயலாளர்கள் ஆர்.ஜெகதீசன், கே.மகேஷ், பி.பிரபாகரன், மு.சின்னராஜ், கே.கோபி, ஏ.தமீம் அன்சாரி, ஜி.வெங்கடேசன், பகுதி நிர்வாகிகள் ,வட்ட நிர்வாகிகள் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் என்.சுரேஷ், ஜி.ஜே.கிரிதரன், பி.சலாவுதீன், என்.குமரன், ஜி.வி. பாலாஜி மற்றும் வட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை

திருப்பூர் தெற்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள் வழங்கி கொண்டாடுவோம்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பர், மே 26 -

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் தாராபுரம் உடுமலை சாலையில் அமைந்துள்ள லைன்ஸ் கிளப் மஹாலில் மாவட்டக் கழக அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இதில் கழக மகளிர் தொண்டரணிதுணைசெயலாளர்சத்யாபழனிக்குமார், தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட சட்டமன்ற தொகுதிபார்வையாளர்கள் அயலக அணி துணை செயலாளர், சேலம் மாமன்ற உறுப்பினர் உமாராணி (காங்கேயம்), கழக செய்தி தொடர்புக்குழு துணை செயலாளர் சித்திக் (மடத்துக்குளம்),நெசவாளர்அணி செயலாளர் கே.எம்.நாகராஜன் தாராபுரம் (தனி), மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள்ராசிகே.ஆர். முத்துக்குமார்,டி.சக்திவேல், பெ.பிரபாவதி, பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள்கே.எஸ்.தனசேகர், சி.சியாம்பிரசாத், வி.மகாலிங்கம், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.ஆர்.பாபு, வழக்கறிஞர் ஆ.இராமலிங்கம், யு.என்.பி.குமார், கே.எஸ்.கருணாகரன், ஆர். சிவக்குமார், எ.கே.கார்த்திகேயன், சா.மெய்யப்பன், எம்.பர்வதவர்த்தினி,

ஒன்றிய செயலாளர்கள் எஸ்.வி.செந்தில்குமார், கே.சந்திரசேகரன், சி.செந்தில்குமார், ப.பழனிசாமி, துரை தமிழரசு, எஸ்.சந்திரசேகரன், சா.ராஜ மாணிக்கம்,ச.கிரி,சி.பிரபு,எஸ்.ஆர். எஸ்.செல்வம்(எ)தமிழ்செல்வம், சி.கருணைபிரகாஷ், கே.கே.சிவானந்தன், எம்.எஸ்.முரளி, எம்.எ.சாகுல்அமீது, கே.ஈஸ்வரசாமி, தி.செழியன், எஸ்.கே.எம்.தங்கராஜ் (எ) மெய்ஞானமூர்த்தி, க.செந்தில்குமார், எஸ்.என்.காணியப்பன், ஜி.கதிர்வேல்,என்.கமலகண்ணன், ப.பழனி சாமி, துரை தமிழரசு, நகர செயலாளர்கள் நா.சேமலையப்பன், சு.முருகானந்தம், எஸ்.முருகானந்தம், பேரூர் செயலாளர்கள் கு.குப்புசாமி, எஸ்.அன்பரசு, கோ.சுரேஷ், க.தண்டபாணி, ரா.பன்னீர்செல்வம், என்.பால கிருஷ்ணன், ஆ.பாலகிருஷ்ணன், எஸ்,எம்.ராமசாமி உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

கலை, இலக்கியம், அரசியல் என முப்பரிமாணம் கொண்டு சிறப்பாக செயல்பட்டவரும்,நம்தாய்மொழியாம் தமிழ்மொழிக்கு செம்மொழி உயர்வை பெற்றுத்தந்தவரும் உலகெங்கும் பரவிக்கிடக் கும் தமிழினத்தின்உள்ளங்களில் எந்நாளும் குடிகொண்டிருப்பவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழகங்களின் சார்பிலும், துணை அமைப்புகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்களும் இணைந்து பொதுமக்கள் பயன்பெறும்வகையில்நலத் திட்டஉதவிகள்வழங்கியும், கழகத்தின் இருவண்ண கொடியை ஏற்றியும், கழத்தின்மூத்தமுன்னோடிகளை சிறப்பிக்க செய்தும், ஏழை எளிய பொது மக்களுக்கு, முதியோர், ஆதரவற்றகுழந்தைகள், மாற்றுத் திறனாளிகளுக்குஇன்றைய காலகட்டத்திற்கு தேவையான மருத்துவ உதவிகள், அத்தியாவசியபொருட்கள் மற்றும் உணவுகள் வழங்கியும், முத்தமிழறிஞர் கலைஞர்அவர்களின்திருவுருவப் படத்தினை வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தியும், முத்தமிழறிஞர் கலைஞர்அவர்களின்நூற்றாண்டு விழாவை எழுச்சியோடு நினைவு கூரும் வகையில் சரித்திர நாயகன் இந்தியாவில் வேறு எந்த தலைவருக்கும்இல்லாதசமூகநீதிகாத்த எந்நாளும் நம் இதயத்தில் குடிகொண்டுஇருக்கும்முத்தமிழறிஞருக்கு பெருமை சேர்க்கும் வகையில் நிகழ்ச்சியை சிறப்பாக கொண்டாடுவதெனஇக்கூட்டம்ஏகமனதாகதீர்மானிக்கிறது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மெட்டல் பாக்ஸ் மு.நடராசன்
மே 26 (2003)

கழகம் துவக்கிய காலத்திலேயே உறுப்பினராகி, தமது பகுதியில் மன்றத்தை துவக்கி கழகப் பணியாற்றியவர்.

இராயபுரம் பகுதி பிரதிநிதி, பகுதி அவைத் தலைவர் மற்றும் இராதாகிருஷ்ணன் நகர் பகுதி துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மெட்டல் பாக்ஸ் தொழிற்சாலையில் தொ.மு.ச. அமைப்பை உருவாக்கி அதன் பொதுச்செயலாளராகவும், மாவட்ட கவுன்சில் பொதுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து தொழிலாளர் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.